# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் III பரீட்சை – 2020 யூலை

## (303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும்

நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும் என்ற இந்த வினாத்தாளானது பாடப் புத்தகத்தை அடிப்படையாகக் கொண்ட, 3 பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட 9 கட்டாய வினாக்களைக் கொண்டுள்ளது.

**பகுதி A** ஆனது ஒவ்வொன்றும் 5 புள்ளிகளைக் கொண்ட 4 வினாக்களை உள்ளடக்கியுள்ளதுடன் **பகுதி B** ஆனது ஒவ்வொன்றும் 10 புள்ளிகளைக் கொண்ட 3 வினாக்களையும் **பகுதி C** ஆனது ஒவ்வொன்றும் 25 புள்ளிகளைக் கொண்ட 2 வினாக்களையும் உள்ளடக்கியுள்ளது.

அதிகளவான பரீட்சார்த்திகள் வழங்கப்பட்ட நேரத்தினுள் சகல 9 வினாக்களுக்கும் விடையளித்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இவ்வினாத்தாளுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமானதாக இருந்தது.

## பகுதி A

### வினா இல. 01

**பகுதி (a)** இல் நிறுவன ஆளுகையின் இரண்டு கோட்பாடுகளை இனங்காணுமாறும் **பகுதி (b)** இல் நிறுவன ஆளுகை மீதான சிறந்த நடைமுறைக் கோவையில் கோடிட்டுக் காட்டப்பட்ட பணிப்பாளர் சபையின் வகிபாகத்தின் வழிகாட்டல்களைக் குறிப்பிடுமாறும் கேட்கப்பட்டது.

**பகுதி (a)** இற்கு குறிப்பிடத்தக்களவான பரீட்சார்த்திகள் மிகச் சிறந்த புள்ளிகளைப் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், **பகுதி (b)** இற்கு வழங்கப்பட்ட விடைகள் திருப்திகரமானதாக இருக்காததுடன் பல விடைகள் முழுப் புள்ளிகளையும் வழங்க முடியாத வகையில் பூரணமற்றதாகவும் திட்டவட்டமானதாக இல்லாததாகவும் காணப்பட்டன. சில சம்பந்தமற்ற விடைகளும் பரீட்சார்த்திகளால் வழங்கப்பட்டிருந்தன. அவற்றில் சில பின்வருமாறு:

நிறைவேற்றுத்தர மற்றும் நிறைவேற்றுத்தரம் அல்லாத பணிப்பாளர்கள் இருத்தல் வேண்டும்.

தவிசாளர் ஒருவர் இருத்தல் வேண்டும்.

செயற்பாடுகள் வெளிப்படைத்தன்மையுடன் இருத்தல் வேண்டும்.

பணிப்பாளர்கள் நிதிசார் அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

***இவ்வினாவின் ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமாக இருக்கவில்லை.***

### வினா இல. 02

தற்போதைய நோய்ப் பரவல் நிலைமை காரணமாக நிறுவனமொன்று முகங்கொடுக்கின்ற வெளிவாரி இடர்கள் மற்றும் உள்வாரி இடர்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது.

இது இலகுவான வினாவாக அமைந்திருந்ததால் இதற்கு அதிகளவான மாணவர்கள் மிகச் சிறந்த முறையில் விடையளித்திருந்ததுடன் அவர்கள் அனைவரும் 5 புள்ளிகளையும் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும் சில மாணவர்கள் தரப்பட்ட விவரணத்தைச் சரியாக அவதானிக்காது வினாவை வித்தியாசமான கோணங்களில் விளங்கிக்கொண்டிருந்தனர். சிலர் வெளிவாரி இடர்களை உள்வாரி இடர்களாக மாற்றி எழுதியிருந்தனர். இது

இங்கு இனங்காணப்பட்ட பொதுவான தவறாக இருந்தது. அத்துடன் எழுதப்பட்டிருந்த சில விடைகள் பின்வருவன போன்று திட்டவட்டமானதாக இருக்கவில்லை:

அரசியல் இடர், பொருளாதார இடர், சூழல் இடர், நற்பெயர் இடர் மற்றும் இணக்க இடர் போன்றவை.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.***

### வினா இல. 03

இவ்வினா உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல் ஒன்றின் முத்தரப்புத் தொடர்புமுறை பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு சிறந்த முறையில் விடையளித்திருந்தனர்.

சில பரீட்சார்த்திகள் உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலுடன் சம்பந்தப்பட்ட மூன்று தரப்பினரையும் வெறுமனே குறிப்பிட்டிருந்தனராயினும் அவர்களுக்கிடையிலான தொடர்புமுறை பற்றி விபரித்திருக்கவில்லை. எனவே, அவர்களால் முழுப் புள்ளிகளையும் பெற முடியவில்லை. சிலர் ஒவ்வொரு தரப்பினரதும் பொறுப்புகளை மாற்றி மாற்றி எழுதியிருந்தனர். உதாரணமாக, நிதிக் கூற்றுக்களுக்கு பயிற்சியாளர் பொறுப்பு, பொறுப்பான தரப்பானது கணக்காய்வு அபிப்பிராயத்திற்குப் பொறுப்பு போன்றவை.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமானது.***

### வினா இல. 04

இவ்வினா நிறுவன மட்டத்திலும் தனிநபர் கணக்காய்வு மட்டத்திலும் தாபிக்கப்படும் தரக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. **பகுதி (a)** ஆனது தரக் கட்டுப்பாட்டு முறைமையின் மூலகங்கள் பற்றியும் **பகுதி (b)** ஆனது வேலைத்தாள்களின் மீளாய்வின் கீழ் தனியான ஈடுபடுத்தல் ஒன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய செயற்பாடுகள் பற்றியும் கேட்டிருந்தது.

வினாவின் **பகுதி (a)** இற்கு பரீட்சார்த்திகள் திருப்திகரமாக விடையளித்திருந்தனர். ஆனால் **பகுதி (b)** இற்கு வழங்கப்பட்ட விடைகள் திருப்திகரமானதாக அமையவில்லை. சில பரீட்சார்த்திகள் அத்தகைய செயற்பாடுகள் பற்றிய எவ்வித அறிவையும் கொண்டிருக்கவில்லை. சிலர் கண்காணிப்பு, மேற்பார்வை, அவதானிப்பு போன்ற சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தனர்.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.***

## <u>பகுதி B</u>

### வினா இல. 05

இவ்வினா 3 பகுதிகளைக் கொண்டிருந்ததுடன் இங்கு கணக்காய்வு அறிக்கை மற்றும் கணக்காய்வு அபிப்பிராயம் போன்றவை பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு பரீட்சிக்கப்பட்டது. பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு மிதமான மட்டத்தில் விடையளித்திருந்தனர். **பகுதி (a)** மற்றும் **(b)** இற்கு பரீட்சார்த்திகளால் அளிக்கப்பட்ட விடைகள் திருப்திகரமான மட்டத்தில் அமைந்திருந்தது. எவ்வாறாயினும், **பகுதி (b)** இற்கான கணக்காய்வு அபிப்பிராயத்தை வடிவமைப்பதில் கருத்திற் கொள்ளப்படுகின்ற விடயங்களை அதிகளவான பரீட்சார்த்திகள் தெளிவாகத் தொடர்புபடுத்தியிருக்கவில்லை என்பதுடன் பூரணமான விடையாக கருத்திற் கொள்ளப்பட முடியாத பூரணமற்ற சொற்களைக் குறிப்பிட்டிருந்தனர். உதாரணமாக, 'முகாமையால் செய்யப்படுகின்ற கணக்கீட்டு மதிப்பீடுகள் நியாயமானவையா' என்பதற்குப் பதிலாக 'கணக்கீட்டு மதிப்பீடுகள்' என்று மட்டும் பரீட்சார்த்திகள் குறிப்பிட்டிருந்தனர். 'தெரிவுசெய்யப்பட்டு பிரயோகிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள், நிதி

அறிக்கையிடல் சட்டகத்துடன் மாறாதிருக்கிறதா' என்பதற்குப் பதிலாக 'கணக்கீட்டுக் கொள்கைகள்' என்று மாத்திரம் பரீட்சார்த்திகள் குறிப்பிட்டிருந்தனர்.

சில மாணவர்களிடம் கணக்காய்வு அபிப்பிராயம் பற்றிய சரியான அறிவு காணப்படவில்லை. இதனால் **பகுதி (c)** இற்கு, மாற்றப்பட்ட அபிப்பிராயத்தின் வகைகளைக் குறிப்பிடாது, சிலர் மாற்றப்பட்ட அபிப்பிராயம் மற்றும் மாற்றப்படாத அபிப்பிராயம் என்பதான இரண்டு வகைகளைக் குறிப்பிட்டிருந்தனர்.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமானதாக இருந்தது.***

## வினா இல. 06

இவ்வினா, அடிப்படை நெறிமுறைக் கோட்பாடுகளுடன் ஒத்திசைவதற்கான அச்சுறுத்தல்கள் பற்றிய அறிவையும் மதிப்பீட்டுப் பணியினை ஏற்றுக்கொள்வதில் நடைமுறைப்படுத்த வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றியும் பரீட்சித்திருந்தது. இவ்வினா கோட்பாட்டு அறிவை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

பாதுகாப்பு தொடர்பில் வினவப்பட்ட வினாவின் **பகுதி (a)** இற்கு அதிகளவான பரீட்சார்த்திகள் விடையளித்திருந்ததுடன் திருப்திகரமான அளவில் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். ஆனால் **பகுதி (b)** இற்கு, சில பரீட்சார்த்திகள் நன்றாக விடையளிக்கவில்லை. அடிப்படைக் கோட்பாடுகளுடன் ஒத்திசைவதற்கான அச்சுறுத்தல்களை அதிகளவான பரீட்சார்த்திகள் அடையாளங் கண்டிருந்த போதிலும், அவர்களால் அத்தகைய அச்சுறுத்தல்களைத் தெளிவாக விபரிக்க முடியவில்லை. இதனால், சில பரீட்சார்த்திகள் அச்சுறுத்தல்களுக்குப் பிழையான விளக்கங்களை வழங்கியிருந்தனர். உதாரணம்: சுய நாட்ட அச்சுறுத்தலானது சேவை நாடுநருடனான நீண்ட கால உறவு காரணமாக எழுகிறது.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.***

## வினா இல. 07

கணக்காய்வு ஈடுபடுத்தல் மற்றும் கணக்காய்வு ஆவணப்படுத்தல் ஆகியவற்றுக்காகத் தயாரிக்கப்பட்ட திட்டமிடல் ஞாபகக்குறிப்பு தொடர்பான அறிவை இவ்வினா பரீட்சித்திருந்தது. இவ்வினாவின் **பகுதி (A)** ஆனது திட்டமிடல் ஞாபகக்குறிப்பில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்களைப் பரீட்சித்திருந்ததுடன் **பகுதி (B) (a)** ஆனது வேலைத் தாள்களின் வடிவமைப்பு மற்றும் அதன் உள்ளடக்கத்தைப் பாதிக்கின்ற விடயங்களையும் **பகுதி (B) (b)** ஆனது நிரந்தரக் கணக்காய்வுக் கோப்பில் உள்ளடக்கப்படக்கூடிய தகவல்களின் வகைகளையும் பரீட்சித்திருந்தன.

அதிகளவான பரீட்சார்த்திகள் முழு வினாவுக்கும் விடையளிக்க முயற்சித்திருந்தனர். அவர்களில் பலருக்கு திட்டமிடல் ஞாபகக்குறிப்பு என்றால் என்ன, அதன் பயன்பாடுகள் என்ன, அதில் உள்ளடக்கப்படும் தகவல்கள் யாவை போன்ற சரியான விளக்கம் காணப்படவில்லை.

அதிகளவான பரீட்சார்த்திகளிடம் வேலைத் தாள்கள் மற்றும் நிரந்தர கணக்காய்வுக் கோப்பு போன்றவை பற்றிய செய்முறை அனுபவம் இன்மையால் வினாவின் **பகுதி (b)** இற்கு விடையளிக்க முடியவில்லை. அவர்களில் சிலர் நிரந்தர கணக்காய்வுக் கோப்பில் உள்ளடக்கப்படும் தகவல்கள் என பல பிழையான விடயங்களைக் குறிப்பிட்டிருந்தனர். உதாரணமாக, கடந்த ஆண்டு கணக்காய்வில் பெறப்பட்ட கணக்காய்வுச் சான்று, கணக்காய்வு நடைமுறைகளும் முறையியலும், கடந்த ஆண்டின் கணக்காய்வு அறிக்கை போன்றவற்றைக் குறிப்பிட்டிருந்தனர்.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.***

<u>**பகுதி C**</u>

**வினா இல. 08**

இவ்வினா 2 பகுதிகளைக் கொண்டது, **பகுதி (A)** ஆனது **(a), (b), (c)** மற்றும் **(d)** என 4 உப பகுதிகளைக் கொண்டிருந்ததுடன் **பகுதி (B)** ஆனது **(a), (b)** மற்றும் **(c)** என 3 உப பகுதிகளைக் கொண்டிருந்தது. ஒட்டுமொத்தத்தில், தரப்பட்ட விடய ஆய்வின் அடிப்படையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் பற்றிய எண்ணக்கருக்கள், கட்டுப்பாட்டுச் சூழல் மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டுப்பாடுகள் போன்றவை பற்றிய பரீட்சார்த்திகளின் ஆற்றலை இவ்வினா பரீட்சித்திருந்தது.

<u>**பகுதி (A)**</u>

**பகுதி (a)** ஆனது சம்பளப் பட்டியல் முறைமையின் உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்களை இனங்காண்பது பற்றிக் கவனஞ் செலுத்தியதுடன், **பகுதி (b)** ஆனது மேற்படி பலவீனங்களைச் சமாளிப்பதற்கான பரிந்துரைகள் பற்றியும் **பகுதி (c)** ஆனது பயனுறுதிமிக்க சம்பளப் பட்டியல் செயன்முறையின் நோக்கங்கள் பற்றியும் வினவியிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இந்த 3 பகுதிகளுக்கும் வெற்றிகரமாக விடையளித்து முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

எவ்வாறாயினும், பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் தகவல் தொழில்நுட்பப் பொதுக் கட்டுப்பாடுகள் மற்றும் பிரயோகக் கட்டுப்பாடுகள் பற்றிய அறிவைப் பரீட்சித்த **பகுதி (c)** இற்கு விடை அளிக்கவில்லை. பரீட்சார்த்திகளிடம் தகவல் தொழில்நுட்பக் கட்டுப்பாடுகள் பற்றிய அறிவு காணப்பட்டிருக்கவில்லை. இப்பகுதிக்கு விடையளித்த சில பரீட்சார்த்திகளால் சம்பந்தப்பட்ட கட்டுப்பாடுகளுக்கு இடையிலான வேறுபாட்டைப் பிரித்தறிய முடியவில்லை என்பதுடன் பொது மற்றும் பிரயோகக் கட்டுப்பாடுகள் பற்றி குழப்பமான மனநிலையில் காணப்பட்டிருந்தனர். சில பரீட்சார்த்திகள் பொதுக் கட்டுப்பாடுகளுக்கு மாத்திரம் உதாரணங்களை வழங்கியிருந்தனர்.

உதாரணம்: கடவுச்சொல் கட்டுப்பாடுகள், காப்புப்பிரதி, கதவடைப்பு, தீச்சுவர் போன்றவை. அதிகளவான வர்களிடம் பிரயோகக் கட்டுப்பாடுகள் பற்றிய எவ்வித எண்ணவோட்டங்களும் காணப்படவில்லை.

<u>**பகுதி (B)**</u>

**பகுதி (a)** ஆனது உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் நோக்கங்கள் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்தது. **பகுதி (b)** ஆனது கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் பற்றிய அறிவு பற்றிக் கவனஞ் செலுத்தியதுடன் **பகுதி (c)** ஆனது உள்ளகக் கட்டுப்பாடுகளின் உள்ளார்ந்த வரையறை எண்ணக்கரு பற்றிப் பரீட்சித்தது.

பல பரீட்சார்த்திகள் நிறுவனமொன்றின் செயற்பாட்டின் மீது உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் நன்மைகளை விளங்கிக் கொள்வதில் தவறியிருந்தனர். அதிகளவான மாணவர்கள் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் நோக்கங்களுக்காக பொதுவான விடைகளைக் குறிப்பிட்டிருந்தனர். உதாரணம்: நிறுவன நோக்கங்களை வினைத்திறனாகவும் பயனுறுதிமிக்க வகையிலும் அடைந்துகொள்ளல், பணித் தொகுதியினர் மத்தியில் கடமைகளைப் பகிர்தல் போன்றவை.

பல பரீட்சார்த்திகளிடம் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவான விளக்கம் காணப்படவில்லை. அவர்களில் சிலர் மேற்பார்வை, நிறுவனம் போன்ற பொதுவான விடைகளை எழுதியிருந்தனர்.

***வினாவின் இப்பகுதிக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.***

## வினா இல. 09

இவ்வினா 2 பகுதிகளைக் கொண்டது. **பகுதி (A)** ஆனது **(a), (b), (c), (d), (e)** எனும் 5 உப பகுதிகளைக் கொண்டதுடன் **பகுதி (B)** ஆனது **(a), (b)** எனும் 2 உப பகுதிகளைக் கொண்டது. இவ்வினா விடய ஆய்வொன்றை அடிப்படையாகக் கொண்டதுடன் கம்பனி ஒன்றின் கணக்காய்வை நடத்துகின்ற செய்முறை அறிவு இங்கு பரீட்சிக்கப்பட்டது.

**<u>பகுதி (A)</u>**

வினாவின் இப்பகுதியானது கணக்காய்வு நடைமுறைகளை ஆற்றுவதற்கான இடர் பகுதிகளை இனங்காணுதல், கட்டுப்பாடுகளை சோதனை செய்தல், வலுவளிப்பு நடைமுறைகள், உறவுமுறைத் தரப்பு ஊடுசெயல்களை இனங்காணுதலும் வெளிப்படுத்துதலும் ஆகியன தொடர்பான மாணவர்களின் அறிவு பரீட்சிக்கப்பட்டது.

**(a)** கணக்காய்வு நடைமுறைகளை மேற்கொள்ளும்போது விசேட கவனம் செலுத்தப்பட வேண்டிய இடர் பகுதிகளை அடையாளங் காண்பதில் பரீட்சார்த்திகள் கொண்டுள்ள அறிவு பற்றிக் கவனஞ் செலுத்தப்பட்டது. பல பரீட்சார்த்திகள் இடர் பகுதிகளை அடையாளங் காண்பதற்குத் தவறியிருந்தனர். அதற்கான காரணம் கணக்காய்வு தொடர்பான செய்முறைப் பயிற்சி இல்லாமையாகும்.

**(b)** உறுதிப்படுத்தலை ஒரு கணக்காய்வு நடைமுறையாகப் பயன்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்கள் பற்றி இங்கு கவனம் செலுத்தப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடை அளித்திருந்ததுடன் திருப்திகரமான அளவு புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**(c)** இங்கு கட்டுப்பாட்டுச் சோதனைகள் மற்றும் வலுவளிப்பு நடைமுறைகள் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் பரீட்சிக்கப்பட்டன. அதிகளவான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தனர். பரீட்சார்த்திகளிடம் இந்தக் கணக்காய்வு எண்ணக்கருக்களுக்கு இடையிலான வேறுபாடுகள் பற்றி எவ்வித தெளிவான எண்ணவோட்டங்களும் இருக்கவில்லை.

**(d)** மற்றும் **(e)**

இங்கு உறவுமுறைத் தரப்பினர் பற்றிக் கவனம் செலுத்தப்பட்டது. **பகுதி (d)** இற்கு அதிகளவான பரீட்சார்த்திகள் உறவுமுறைத் தரப்பினரின் ஊடுசெயல்களை அடையாளங் காண்பதற்கான பொருத்தமான தரப்பினரை தெளிவாக அடையாளங் கண்டிருந்தனர். ஆனால் சிலர் கணக்காய்வு நிறுவனம், பயிற்சியாளர்கள், முகமைப் பணிப்பாளரின் வாழ்க்கைத்துணை போன்ற சம்பந்தமற்ற விடைகளைக் குறிப்பிட்டிருந்தனர். **பகுதி (e)** இற்காக உறவுமுறைத் தரப்பு ஊடுசெயல்களை அடையாளங் காண்பதில் தரப்பட்ட கம்பனியிலுள்ள இடர்ப் பகுதிகளை அடையாளங் காண்பதற்கு சில பரீட்சார்த்திகள் தவறியிருந்தனர்.

**<u>பகுதி B</u>**

வினாவின் இப்பகுதி கணக்காய்வு ஒன்றின் பொருண்மை மதிப்பீடு பற்றிய மாணவர்களின் அறிவைப் பரீட்சித்திருந்தது.

**(a)** இப்பகுதி பொருண்மை மதிப்பீட்டின் முக்கியத்துவத்தைச் சோதித்தது. பல பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு சரியாக விடையளித்து முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**(b)** பொருண்மை மட்டத்தை எவ்வாறு கணிப்பிடுவது, பொருண்மை மட்டத்தின் பயன்பாடுகள் என்ன, கணக்காய்வில் பொருண்மை மட்டத்தை ஒரு கணக்காய்வாளர் எவ்வாறு பயன்படுத்த முடியும் போன்றவை பற்றிய விளக்கங்கள் அதிகளவான மாணவர்களிடம் காணப்படவில்லை. பொருண்மை மட்டம் பற்றிய செய்முறைப் பிரயோக அறிவு குறைவாக இருந்ததன் காரணமாக வினாவின் இப்பகுதிக்கு விடையளிக்க மாணவர்கள் தவறியிருந்ததுடன் திருப்திகரமான அளவு புள்ளிகளையும் பெற்றிருக்கவில்லை.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.***

**பரீட்சையில் செயலாற்றுகையை மேம்படுத்தும் பொருட்டு பரீட்சார்த்திகளின் ஆற்றல்சார் மட்டத்தை உயர்த்துவதற்கான பரிந்துரைகள்:**

(1) பரீட்சார்த்திகள் பாடப் புத்தகத்தைப் படித்து, அதன் உள்ளடக்கங்களைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

(2) இந்தப் பாடத்துடன் சம்பந்தப்பட்ட கட்டுரைகள், சஞ்சிகைகளை வாசிப்பதுடன் கணக்காய்வுடன் தொடர்புடைய வேறு விடயங்களையும் வாசித்தறிதல் வேண்டும்.

(3) பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொற்களின் வரைவிலக்கணங்களை விளங்கிக் கொள்வதுடன், வினாத்தாளின் இறுதியில் தரப்பட்டுள்ள செயல் வினைச் சொல் நிரலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பயிற்சி பெறவும்.

(4) கடந்த கால வினாத்தாள்களின் உள்ளடக்கங்களைக் கற்பதுடன், குறைந்தது கடந்த 2 – 3 ஆண்டுகளின் நடைபெற்ற பரீட்சைகளின் வினாத்தாள்களைச் செய்து பார்த்து வினாக்கள் அமைக்கப்பட்டுள்ள விதம் பற்றி விளங்கிக்கொள்ள முயற்சித்தல் வேண்டும்.

(5) பரீட்சார்த்திகள் வினாத்தாள்களில் தரப்பட்டுள்ள கோட்பாடுகள் மற்றும் பரீட்சையில் அதனைப் பிரயோகிப்பது பற்றிய பரீட்சகரின் எதிர்பார்ப்பு ஆகியவற்றுக்கிடையிலான தொடர்புடைமையை விளங்கிக்கொள்ளுதல் வேண்டும்.

(6) கடந்தகால வினாத்தாள்களில் பாடப் புத்தகத்திலுள்ள எந்தப் பகுதி பரீட்சிக்கப்பட்டுள்ளதோ அத்தகைய பகுதிகளை சிறு குறிப்புகளாக எழுதிக்கொண்டு படித்து விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

(7) பரீட்சார்த்திகள் வினாத்தாளுக்காக வழங்கப்பட்ட நேரத்தை அடிப்படையாகக் கொண்டு கடந்த கால வினாக்களுக்கு விடையளித்துப் பயிற்சி எடுத்தல் வேண்டும். இது பரீட்சையின்போது நேர முகாமைத்துவத்தை மேம்படுத்த உதவும்.

(8) பாடப் புத்தகத்தில் தரப்பட்ட ஒவ்வொரு பாட அத்தியாயத்திலிருந்தும் சிறு குறிப்புகளை எழுதிக் கொள்வதுடன் நேரம் கிடைக்கும் போதெல்லாம் பாடத்திட்டத்தின் உள்ளடக்கங்களை நினைவில் வைத்திருப்பதற்காக அவற்றைப் படிக்கவும்.

(9) பரீட்சார்த்திகள் விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுதல் வேண்டும்.

(10) பரீட்சார்த்திகள் வினாத்தாளுக்கு விடையளிப்பதற்கு முன், அதில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும்.

(11) பரீட்சார்த்திகள், வினாவை விளங்கிக்கொள்வதற்கும் வினாவில் கேட்கப்பட்டதற்கு பொருத்தமானதும் துல்லியமானதுமான விடைகளை வழங்குவதற்குமாக பரீட்சையின்போது தமது மனநிலையை தெளிவாகவும் சமநிலையாகவும் வைத்திருத்தல் வேண்டும்.

(12) பரீட்சார்த்திகள் வினாக்களுக்கு வழங்கப்பட்டுள்ள புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு அவ்வினாவுக்கு விடையளிப்பதற்கான நேரத்தை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதுடன், வினாத்தாளில் தரப்பட்ட சகல வினாக்களுக்கும் விளைதிறனான வகையில் விடையளிப்பதற்கான இயலுமையுடன் இருக்க வேண்டும்.

(13) விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன், தேவைப்படுத்தப்பட்ட சகல வினாக்களுக்கும் விடையளிக்கப்பட்டுள்ளனவா, பொருத்தமானவாறு இலக்கமிடப்பட்டுள்ளனவா என்பதை இருமுறை பரீட்சித்துக் கொள்ளவும்.

- * * * -